[1971 ஜூன் 28

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கம் இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதலாம். நேரில் வற்புறுத்தலாம். நாங்கள் பலமுறை கடிதம் எழுதியும், நேரில் வற்புறுத்தியும் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் பாராமுகமாக இருக்கிறார்கள். இதுமாத்திரம் அல்ல— எத்தனையோ விஷயங்களில் அசட்டை செய்துகொண்டிருக் கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : இதேமாதிரி குன்னூரில் இருந்த சத்து உணவு ஆராய்ச்சி நிலையத்தை ஹைதராபாத்திற்கும், உதகையில் இருந்த எபிக்ராபி நிலையத்தை மைசூருக்கும் மாற்றியிருக் கிறார்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: 22-ஆம தேதி நடந்த கூட்டத்தில் 1971-72-க்கு ஆராய்ச்சிக்காக 27 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படியானால் மண்டபத்திற்கும், சென்னைக்கும் அதில் எவ்வளவு கிடைக்கும் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் தகவல் அளிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி: மதுவிலக்கு ரத்தாகிற காரணத்தினால் மதுவுக்கு ஆட்டிறைச்சியைவிட மீனே அதிக சுவையுடையதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். மண்டபம் போன்ற இடங்களில் இருந்து வெளியிடங்களுக்கு அதிகமான மீன் விற்பனைக்கு அனுப்ப அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மதுவையும், மீனையும் ஒன்றாகச் சுவைத்தவர்கள் சிபாரிசு செய்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள்

* 67 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் அரசு சார்பில் இலவசமாக வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். ஆனால் இதற்கென்று ஒரு தனி திட்டம் உள்ளது. அத்திட்டத்திற்கிணங்க வானொலிப் பெட்டிகள் அரிசன பகுதி களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் எல்லா மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தாய நிலையில் உள்ள ஒரு அரிசன் குடியினருக்கு ரூ. 300 மதிப்புள்ள வானொலிப் பெட்டி அல்லது ஐந்து அம்பர் சர்க்காக்களை பரிசுப்பொருளாக வழங்கப்படுகின்றது.